RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 192 | ஜூலை.15 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழக எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான ஊழல் வழக்கு விவரங்களை வழங்க உத்தரவிடக் கோரி தவெக மனு



சென்னை: ஜூலை.15-

தமிழகத்தில் உள்ள எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான ஊழல் வழக்கு குறித்த விவரங்களை வெளியிட மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிடக் கோரி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தவெக சென்னை மண்டல வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் ஆதித்ய சோழன் தாக்கல் செய்த மனுவில், "தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையிடம் தமிழகத்தின் முன்னாள், இந்நாள் எம்.பி எம்எல்ஏக்கள் மீதான ஊழல் வழக்குகள் குறித்த விவரங்களை வழங்கக்கோரி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விண்ணப்பித்தேன்.

மேலும், அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் நிலை குறித்த விவரங்களை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தேன். எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மாநில தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தேன். ஆனாலும், நான் கேட்ட தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை .

பொது மக்கள் நலன் கருதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட தகவல்களை தர மறுப்பது அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே எனது கோரிக்கை தொடர்பான விவரங்களை வழங்க மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிட வேண்டும்." என மனுவில் கூறியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகத்தில் ஜூலை 20 வரை எங்கெல்லாம் கனமழைக்கு வாய்ப்பு?

சென்னை: ஜூலை.15-

தமிழகத்தில் இன்று முதல் 20ம் தேதி வரை ஒரு சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:"வடக்கு வங்கக் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது, வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக, வங்கதேசம் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு வங்க பகுதிகளில் நிலவுகிறது. இது நாளை மேற்குவங்க பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்றும் (ஜூலை 15), நாளையும் ஓரிரு இடங்களிலும், 16 முதல் 20ம் தேதி வரை ஒரு சில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் பலத்த தரைக் காற்று வீசக்கூடும்.

தமிழகத்தில் 15ம் தேதி நீலகிரி மாவட்டத்திலும், 16ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 17ம் தேதி நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், தேனி, திண்டுக்கல், திருவள்ளூர், ராணிபேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

18ம் தேதி நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

19, 20 தேதிகளில் நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன் ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்த பட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்றும், நாளையும், சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி (இன்றைய காலை நிலவரப்படி) அதிகபட்சமாக சேலம் மாவட்டம் சந்தியூரில் 7 செ.மீ, நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 6 செ.மீ, கடலூர் மாவட்டம் அண்ணாமலை நகர், பரங்கிப்பேட்டை, மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம், நீலகிரி மாவட்டம் கூடலூர் சந்தை ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ, நீலகிரி மாவட்டம் மேல் கூடலூர், பார்வூட், கடலூர் மாவட்டம் சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி, திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது." என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஆன்லைன் சூதாட்டத்தை இன்னும் தடை செய்ய மறுப்பது ஏன்? அரசுக்கு அன்புமணி கேள்வி

சென்னை, ஜூலை.15-

"மதுரை மாவட்டம் சில்லாம்பட்டியைச் சேர்ந்த சின்னச்சாமி என்ற ஓட்டுனர் ஆன்லைன் சூதாட்டத்தில் பல லட்சம் ரூபாயை இழந்து கடனாளி ஆனதால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக தொடர்வண்டி முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். சின்னச்சாமியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திமுக அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்டத்தடை சட்டம் செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு மட்டும் கடந்த 20 மாதங்களில் 31 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக இதுவரை 91 பேர் ஆன்லைன் சூதாட்டத்தால் உயிரை இழந்துள்ளனர்.

இவ்வளவு பேர் இன்னுயிரை இழந்த பிறகும் கூட இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் 18 மாதங்களாக நிலுவையில் உள்ள மேல்முறையீட்டை விசாரணைக்கு கொண்டு வந்து தடை பெற தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆன்லைன் சூதாட்ட நிறுவனங்கள் மீது திமுக அரசு கொண்டுள்ள அக்கறை தான் இதற்கு காரணமா? எனத் தெரியவில்லை. ஆன்லைன் சூதாட்டம் தமிழகத்தில் தொடர அனுமதித்தால் லட்சக்கணக்கான குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வரும் நிலை ஏற்படும். அதைத் தடுக்கும் வகையில் ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றத்தில் தடை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயில் கும்பாபிஷேகம்; அரோகரா கோஷம் விண்ணை பிளந்தது



திருப்பரங்குன்றம்: ஜூலை.15-

முருகனின் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 14 ஆண்டுகளுக்கு பின் நேற்று (ஜூலை 14) அதிகாலை 5:30 மணியளவில் கோலாகலமாக கும்பாபிஷேகம் நடந்தது.

இக்கோயிலில் ரூ. 2.37 கோடியில் திருப்பணிகள் நிறைவடைந்து கும்பாபிஷேகத்திற்காக ஜூலை 10 யாகசாலை பூஜைகள் துவங்கின. நேற்று மாலை 7ம் கால பூஜை நடந்ததைத்தொடர்ந்து இரவு மூலவர்களுக்கு காப்பு கட்டப்பட்டது.

நேற்று (ஜூலை 14) அதிகாலை 3:00 மணிக்கு மங்கள இசை முடிந்து, விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசமாகி அதிகாலை 3:45 மணிக்கு 8ம் கால யாகசாலை பூஜை பூர்த்தி செய்யப்பட்டது.

தீபாராதனை முடிந்து அதிகாலை 4:30 மணிக்கு யாகசாலையில் வைத்து பூஜித்த புனித நீர் அடங்கிய தங்க, வெள்ளிக் குடங்கள் யாகசாலையில் இருந்து கோபுரங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

ராஜகோபுரம், வல்லப கணபதி விமானம், கோவர்த்தனாம்பிகை அம்பாள் விமான கலசங்களில் புனித நீரால் கும்பாபிஷேகம் நடந்து முடிந்தது.

அதே நேரத்தில் பரிவார தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடந்தது. மூலவர்களுக்கு மகா அபிஷேகம் முடிந்ததும் தீபாராதனை நடைபெற்றது.

அதன்பின் மூலவர்களை தரிசிக்க பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். வழக்கமாக மதியம் ஒரு மணிக்கு கோயில் நடை அடைக்கப்பட்டு மீண்டும் மாலை 4:00 மணிக்கு திறக்கப்படும். ஆனால் இன்று மதியம் நடை அடைப்பு இல்லை.

பக்தர்கள் பரவசம்

கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக தமிழகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் திருப்பரங்குன்றத்தில் குவிந்தனர். கும்பாபிஷேகத்தின் போது வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா, வீர வேல் முருகனுக்கு அரோகரா என்ற பக்தர்களின் கோஷம் விண்ணைப் பிளந்தது.

சிறப்பு ஏற்பாடுகள்

கும்பாபிஷேகம் முடிந்தவுடன் கோயிலுக்குள் தரிசனம் செய்ய செல்லும் பக்தர்கள் சிரமம் இன்றி சென்று திரும்ப இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்தை நகர் எங்கும் இருந்து காண 26 இடங்களில் மெகா எல்.இ.டி., டிவிக்கள் வைக்கப்பட்டுள்ளன.

பத்து ட்ரோன்கள் மூலம் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது, பக்தர்கள் பாதுகாப்புக்காக மூவாயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

அமைச்சர் மூர்த்தி சார்பில் திருமண மண்டபங்களில் 4 லட்சம் பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட உள்ளது.

பக்தர்களுக்கு மஞ்சள் கிழங்கு, மஞ்சள் கயிறு, மூலவர் படம், விபூதி, இனிப்புகளுடன் பிரசாத பைகள் வழங்க அறங்காவலர் குழுத்தலைவர் சத்யபிரியா ஏற்பாடு செய்துள்ளார். பத்து இடங்களில் முதலுதவி மையங்கள், நடமாடும் கழிப்பறைகள், கிரிவல ரோடு உட்பட நகரின் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

மீனாட்சி அம்மன் வருகை

கும்பாபிஷேகத்தில் பங்கேற்பதற்காக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இருந்து மீனாட்சி, சுந்தரேஸ்வரர் பிரியாவிடையுடன் நேற்று திருப்பரங்குன்றம் கோயிலுக்கு வந்தனர். கும்பாபிஷேகம் முடிந்தபின் மாலை 6:30 மணிக்கு அவர்களை வழி அனுப்பும் நிகழ்ச்சி அதன்பின் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை, சத்யகிரீஸ்வரர், பிரியாவிடை, கோவர்த்தனாம்பிகை அம்பாள் வீதியுலா நடக்கிறது.

கும்பாபிஷேக நிகழ்வு தினமலர் இணையதள டி.வி.,யில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## புதுவையில் புதிய அமைச்சர், நியமன எம்எல்ஏக்கள் பதவியேற்பு: எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு











புதுச்சேரி: ஜூலை.15-

புதுச்சேரி புதிய அமைச்சராக ஜான்குமார், நியமன எம்எல்ஏக்களாக மூவர் நேற்று (திங்கள்கிழமை) பதவியேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வை திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் புறக்கணித்தனர்.

புதுவையில் முதல்வர் ரங்கசாமி தலைமையில் என்.ஆர். காங்கிரஸ் பாஜக கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. என்.ஆர். காங்கிரஸ் சார்பில் முதல்வர் உட்பட 4 அமைச்சர்களும், பாஜக தரப்பில் தேர்வானோரில் பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்களாக நமச்சிவாயம், சாய் சரவணக்குமார் ஆகியோர் இருந்தனர். பதவி கிடைக்காத பாஜக எம்எல்ஏக்கள் வாரியத் தலைவர், அமைச்சர் பதவி கோரி வந்தனர். மேலும், அவர்கள் அரசுக்கும், கட்சி மேலிடத்துக்கும் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் ஆட்சி நிறைவு பெறவுள்ள சூழலில் சுழற்சி அடிப்படையில் மற்றொருவருக்கு அமைச்சர் பதவி தர பாஜக தலைமை முடிவு செய்தது. அதேபோல மத்திய அரசால் நேரடியாக நியமிக்கப்பட்ட 3 எம்எல்ஏக்களையும் மாற்ற முடிவு செய்தது. இதற்காக கடந்த மாதம் 27ம் தேதி பாஜக அமைச்சர் சாய் சரவணக்குமார் தனது பதவியை ராஜினாமா செய்தார். அதேநாளில் நியமன எம்எல்ஏக்களாக இருந்த வெங்கடேசன், ராமலிங்கம், அசோக் பாபு ஆகியோரும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர்.

இதையடுத்து பாஜக தரப்பில் காமராஜர் நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்எல்ஏ ஜான்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டது. அதேபோல நியமன எம்எல்ஏக்களாக தீப்பாய்ந்தான், காரைக்காலை சேர்ந்த ராஜசேகர், செல்வம் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டனர்.

மத்திய அரசிடம் இருந்து இதற்கான அனுமதி உடனடியாக கிடைக்கவில்லை. சுமார் 2 வார கால இழுபறிக்கு பிறகு கடந்த வெள்ளிக்கிழமை புதிய அமைச்சர், நியமன எம்எல்ஏக்களுக்கு அனுமதி கிடைத்தது. இதையடுத்து இன்று மதியம் புதுவை சட்டப் பேரவையில் உள்ள பேரவைத்தலைவர் அறையில் நியமன எம்எல்ஏக்கள் பதவியேற்பு விழா நடந்தது.

பேரவைத் தலைவர் செல்வம், எம்எல்ஏக்களாக தீப்பாய்ந்தான், ராஜசேகர், செல்வம் ஆகியோருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து, அவர்களு க்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அரசியல் கட்சியினர் நியமன எம்எல்ஏக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இதனையடுத்து, புதிய அமைச்சர் பதவியேற்பு விழா துணை நிலை ஆளுநர் மாளிகை வளாகத்தில் நடந்தது. துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன் பதவியேற்பு விழா மேடைக்கு வந்தார். தேசிய கீதம், தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

தொடர்ந்து தலைமை செயலாளர் சரத் சவுகான், அமைச்சராக ஜான்குமார் நியமிக்கப்பட்டதற்கான மத்திய உள்துறை செயலகத்தின் அனுமதி கடிதத்தை வாசித்தார். இதைத்தொடர்ந்து ஆளுநர் கைலாஷ் நாதன், அமைச்சராக ஜான் குமாருக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பின்னர் பதிவேட்டில் அமைச்சர் ஜான்குமார் கையெழுத்திட்டார். மீண்டும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு விழா நிறைவு பெற்றது. அமைச்சர் ஜான் குமாருக்கு ஆளுநர் கைலாஷ்நாதன் பூங்கொத்து வழங்கி, சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

முதல்வர் ரங்கசாமி, பேரவைத்தலைவர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், திருமுருகன் உள்பட எம்எல்ஏக்கள், பாஜக, என்.ஆர்.காங்கிரஸ், அதிமுக கட்சித் தலைவர்கள், அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர். எதிர்க்கட்சியான திமுக, காங்கிரஸ் இப்பதவியேற்பு நிகழ்வுகளை புறக்கணித்தன.

இதனை தொடர்ந்து அமைச்சர் ஜான்குமார் புதுவை சட்டப்பேரவைக்கு வந்தார். அங்கு 2வது மாடியில் உள்ள அமைச்சர் அறையில் உள்ள இருக்கையில் அமர்ந்து பொறுப்பேற்றார்.





■ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில், மேலூர் தொகுதி வடக்கு ஒன்றியம் கிடாரிப்பட்டி ஊராட்சியில் பொது மக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் குமரன், தொகுதி பொறுப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் மதிவாணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, ஜூலை.15-

தேனி மாவட்டம், பெரியகுளம் வடகரை கோவிந்தன் மயில்தாயம்மாள் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நாளை (15.07.2025) முதல் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சி பகுதிகளில் 28 முகாம்கள், பேரூராட்சி பகுதிகளில் 21 முகாம்கள், வட்டார ஊராட்சிகளில் 25 முகாம்கள் என 74 முகாம்கள் நாளை (15.07 .2025) முதல் ஆகஸ்ட் 14 - ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இம்முகாம்கள் மூலம் நகர்பகுதிகளுக்கு 13 துறைகளில் 43 சேவைகளும், கிராமப்பகுதிகளுக்கு 15 துறைகளில் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம், பெரியகுளம் வடகரை பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற உள்ள மண்டபத்தில் குடிதண்ணீர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வுதள வசதி, வாகனங்கள் நிறுத்துவற்கான இட வசதி, உள்ளிட் அடிப்படை வசதிகள் குறித்தும் மற்றும் ஒவ்வொரு counter இல் ஒவ்வொரு துறைக்கான பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றும், மனுக்களை பதிவேற்றம் செய்வற்கு தேவையான கணினி வசதி, இணையதள வசதி உள்ளிட்டவைகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, பெரியகுளம் நகராட்சி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், பேருந்து நிலையத்தில் ஆதரவற்ற நிலையில் இருந்த முதியோர்களை முதியோர் காப்பகத்தில் சேர்த்து பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இவ்வாய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத் பீடன், இ.ஆ.ப., நகராட்சி ஆணையாளர் செல்வி தமீஹா சுல்தானா, வட்டாட்சியர் திரு.மருதுபாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஜூலை.15-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 357 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



இக்கூட்டத்தில் வீட்டுமனைபட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.04.2025 அன்று காணொளிக் காட்சியின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கருமல் கிராமத்தில் ரூ.86.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தினை திறந்து வைத்ததையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமுதாய கூடத்திற்கான சாவியை நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்வதற்காக கருமல் ஆதிதிராவிடர் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்குகினார்.

தொடர்ந்து வருவாய்த்துறையின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் கால்நடைகள் இறப்பு நிவாரண உதவித் தொகை ரூ.2,46, 000ஃஇலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி. செல்வி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள், தாட்கோ மாவட்ட மேலாளர் திரு.விஜய பாஸ்கர் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதலமைச்சர் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் ஜூலை 16 அன்று காரைக்குடி மாநகராட்சி, சிவகங்கை , மானாமதுரை நகராட்சிகள், திருப்பத்தூர் பேரூராட்சி மற்றும் தேவகோட்டை, இளையான்குடி ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.15-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் நாளையதினம் (ஜூலை 15.07.2025) முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும் நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

அதன்படி, நாளையதினம் (15.07.2025) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 16 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 4,5,16 ஆகிய பகுதிகளுக்கென காரைக்குடி காலேஜ் ரோடு, ராமநவமி மண்டபத்திலும், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3,4,5,6 ஆகிய பகுதிகளுக்கென சிவகங்கை ஏ.எம்.கே. மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 9,10 ஆகிய பகுதிகளுக்கென மானாமதுரை கோபால் இந்திரா மஹாலிலும், திருப்பத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 3 பகுதிக்கென திருப்பத்தூர் சன்மீனாள் திருமண மண்டபத்திலும்,

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென ஆராவயல் மேலசெம்பொன்மாரி சமுதாயக்கூடத்திலும், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென தாயமங்கலம் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

## காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்துரையாடல்

கன்னியாகுமரி, ஜூலை.15-

கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, மாண மாணவியர்களை நேரில் சந்தித்து, கலந்துரையாடி, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்ட மாணவ மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்துவதற்காக பல் வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் எதிர்கால குறிக்கோள்கள் குறித்து கேட்டறியப்பட்டது. தொடர்ந்து மெல்ல பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆசியர்களிடம் கேட்டறியப்பட்டது. மாணவர்களிடம் பாடங்களில் ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் ஆசிரியர்களை அணுகி நிவர்த்தி செய்து



விட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பள்ளிக்கு ஒழுங்காக வருகை புரியாத மாணவனிடம், ஒழுங்காக பள்ளிக்கு வருகை புரிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. கற்றல் திறனில் பின்தங்கியுள்ள மாணவ மாணவியர்களுக்கு சிறந்த முறையில் அவர்களுக்கு புரியும் வண்ணம்மாக கற்பிக்க வேண்டுமென ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு விலையில்லா பாடநூல்கள், பாடக் குறிப்பேடுகள், பள்ளி சீருடைகள், புத்தகப்பை, நிலவரைப்படம், பேருந்து பயண அட்டை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவதோடு அவர்கள் மேற்படிப்பு பயில்வதற்காக வழிகாட்டுதல் முகாம்கள் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. எனவே நீங்கள் நன்றாக பயின்று, பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பயின்று வாழ்வில் முன்னேற்றம் பெறவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் வருகின்ற ஜூலை 15 அன்று தொடங்கி வைக்கப்படவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது, சிவகங்கை மாவட்டத்தில் மூன்று கட்டங்களாக மொத்தம் 215 முகாம்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, செய்தியாளர்கள் சந்திப்பில் தகவல்

சிவகங்கை, ஜூலை.15-

சிவகங்கை மாவட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் குறித்து, பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கு ஏதுவாக, இன்றையதினம் (13.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற ஜூலை 15.07.2025 முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம், சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற ஜூலை 15.07.2025 முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

இதில், காரைக்குடி மாநகராட்சியில் 27 முகாம்களும், சிவகங்கை ,தேவகோட்டை, மானாமதுரை ஆகிய நகராட்சிகளில் 31 முகாம்களும், 11 பேரூராட்சிகளில் 22 முகாம்களும், 12 சாதாரண ஊராட்சிகளில் 129 முகாம்களும், 3 புறநகர் ஊராட்சிகளில் 6 முகாம்களும் என ஆக மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது. மேலும், இம்முகாம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தன்னார்வலர்கள் மூலம் கடந்த 07.07.2025 அன்று முதல் துண்டு பிரசுரம் மற்றும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும்,பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல்,




பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளிக்க விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகள், இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

இச்சேவைகளை பொதுமக்கள் பெறும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 15.07.2025 அன்று "உங்களுடன் ஸ்டாலின்" திட்டமானது, தொடங்கி வைக்கப்படவுள்ளது. அதனைத்தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக முகாம்கள் தொடங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றிய வராப்பூர் சமுதாயக் கூடத்தில் "உங்களுடன் ஸ்டாலின் " திட்ட முகாமினை தொடங்கி வைக்கவுள்ளார். மேற்கண்ட தினத்தன்று காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 9,10 மற்றும் 11 ஆகிய பகுதிகளுக்கென கழனி வாசல் முத்துகிருஷ்ணா மஹாலிலும், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 23,24,25,26,27 ஆகிய பகுதிகளுக்கென மாஸா மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3 ஆகிய பகுதிகளுக்கென அனுசியா மஹாலிலும், தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:1,2,11 ஆகிய பகுதிகளுக்கென சொர்ணமுத்து மஹாலிலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென பருத்திக்கண்மாய் ஏ.எஸ். கார்டன் மஹாலிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து, செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் மூன்று கட்டங்களாக நடைபெற திட்டமிடப்பட்டு, அதற்கான முன்னேற்பாடு பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாமில், பொதுமக்கள் தங்களின் விண்ணப்பங்களை எவ்வித இடையூறுமின்றி அளிப்பதற்கு ஏதுவாக, அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாமிலும் இசேவை மையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதிகள் ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அளிக்கப்படும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பங்கள் மீது காலதாமதமின்றி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பயன்களும் உடனடியாக வழங்கப்படும். பரிசீலனைக்குட்படுத்தப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் .

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் பகுதியில் முகாம் நடைபெறும் நாளில், உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துக்கழுவன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.அனீஷ் சத்தார் உட்பட பலர் உடனிருந்தனர்.





# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட் இல் படித்த பழைய மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி

சிவகங்கை, ஜூலை.15-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட் இல் படித்த பழைய மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி அனைவரின் ஒத்துழைப்போடு வெகு சிறப்பாக நடைபெற்றது. 2003-2005 படித்த மாணவர்களின் இருபதாம் ஆண்டு நட்புக் கூடுகை நிகழ்வில் பேராசிரியர்களும் மாணவர்களும் பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். வெறும் உரையாடல் நிகழ்வாக மட்டுமன்றி மருத்துவ முகாம், முதியோர் இல்லங்களுக்கு உணவு மற்றும் பொருள் உதவிகள் வழங்குதல், அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயின்று முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களான அனு பாரதி மற்றும் ஜெயஸ்ரீ. மேலும் மூவி மேல்நிலை ப்பள்ளி காரைக்குடியில் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற பத்தாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களான சரண்ராஜ் முகேஷ் குமார் மற்றும் அப்துல் மாலிக் ஆகியோருக்கு உதவித் தொகைகள் வழங்குதல், கல்லூரிக்கு இருக்கைகள் வழங்குதல் என சமூக உதவி செயல் பாடுகளையும் முன்னாள் மாணவர்கள் மிக சிறப் பாக முன்னெடுப்பு செய்தி ருந்தனர்.

# மதுரையில் இந்தியன் வங்கி சுய உதவிக்குழுக்களுக்கான மாபெரும் கடன் வெளிக்கள செயல்திட்டம்

மதுரை, ஜூலை.15-

தமிழ்நாடு மாநிலம் முழுவதுமுள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு நிதி ஆதரவை வழங்கும் நோக்கத்தோடு இந்தியன் வங்கி மதுரையில் தமுக்கம் கண்காட்சி மையத்தில் சுயஉதவிக்கு ழுக்களுக்கான (SHG) கடன் வெளிக்கள (அவுட்ரீச்) நிகழ்ச்சியை மிக பிரமாண்டமாக இந்தியன் வங்கி நடத்தியிருக்கிறது.




இந்த செயல்திட்டமானது, இந்திய அரசின் நிதி சேவைகள் துறை (DFS) முனைப்புடன் செயல்படுத்தி வருகின்ற அகில இந்திய திட்டத்தின் ஒரு பகுதியாகும். நாடுமுழுவதும் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 1 கோடி பெண்களுக்கு கடன் / நிதியுதவிக்கான அணுகுவசதியை வழங்கும் தேசிய செயல்திட்டத்திற்கு இந்தியன் வங்கி வழங்கும் சிறப்பான பங்களிப்பாக இது அமைந்தது. மேலும், பெண்கள் தலைமையேற்று பெறும் முன்னேற்றம் மற்றும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மீது சிறப்பு கவனத்துடன் "விக்ஸித் பாரத் 2047" என்ற தொலைநோக்குத் திட்டத்திற்கு மேலும் வலுசேர்ப்பதாகவும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்தியாவில் சுயஉதவிக்குழுக்கள் / வங்கி இணைப்பு மாதிரி திட்டத்தை 1989ம் ஆண்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்திய வங்கி என்ற பெருமையை இந்தியன் வங்கி கொண்டிருக்கிறது. இது, தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, இன்று மாநிலம் முழுவதும் மற்றும் நாடு முழுவதும் இலட்சக்கணக்கான பெண்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்கி வருகிறது. இதுவரை, 60 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் பயனடையும் வகையில் 5.09 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கு இந்தியன் வங்கி இதுவரை நிதியுதவியை வழங்கி வந்திருக்கிறது. 2025 மார்ச் நிலவரப்படி, சுயஉதவிக் குழுக்களுக்கான நிதி வழங்கலில் ரூ.22224 கோடிகள் என்ற நிலுவையிலுள்ள கடன் வழங்கல் தொகுப்பையும் இவ்வங்கி கொண்டிருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு கடன் உத்தரவாதத்தையும் மற்றும் 3 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு கடன்தாரருக்கும் ரூ.1.5 இலட்சம் வரை கடனை சரியாக உரிய நேரத்திற்குள் திரும்ப செலுத்துவதற்கு 2% வட்டி தள்ளுபடியையும் இத்திட்டம் வழங்குகிறது, இதுவரை இத்திட்டத்தின் கீழ், 20,000 க்கும் அதிகமான தொழில் / வணிக நிறுவனங்களுக்கு இந்தியன் வங்கி உதவியிருக்கிறது.

இந்திய அரசின் நிதிசார் சேவைகள் துறையின் செயலர் நாகராஜு ஐஏஎஸ் இந்நிகழ்வில் உரையாற்றியபோது, "மக்களின் வாழ்வாதார செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு மூலதனத்திற்கான நிதி அணுகுவசதி மிக முக்கியமானது, தனிநபரு க்கான கடன் வழங்கலோடு ஒப்பிடுகையில், மிகக்குறை வான கடன் இடர்வாய்ப்பையே வங்கிகள் எதிர்கொள்கின்றன." என்று கூறினார்.

சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் மாறுபட்ட பல்வேறு துறைகளில் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் தொழில் முயற்சிகளின் உத்வேகமேற்படுத்தும் வெற்றி சாதனைகளையும் இந்த நிகழ்வு காட்சிப்படுத்தியது. .

தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமிருந்து பல்வேறு சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 3000 க்கும் அதிகமான பெண்கள் இந்நிகழ்வில் ஆர்வத்தோடு பங்கேற்றனர். சுயஉதவிக் குழுக்களுக்கான நிதி வெளிக்கள செயல்திட்ட நிகழ்வின்போது ரூ.1011 கோடி என்ற ஒட்டுமொத்த தொகைக்கு நிதியுதவிக்கான ஒப்புதல் கடிதங்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயலாக்க அதிகாரி பினோத் குமார், இதன் செயலாக்க இயக்குனர்கள் அசுடோஷ் சௌத்ரி, ஷிவ் பஜ்ரங் சிங் மற்றும் பிரஜேஷ் குமார் சிங் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# மதுரையில் ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி 500 வீட்டு மனைகள் வெற்றிகரமாக விற்று பெரும் சாதனை படைத்தது

மதுரை, ஜூலை.15-

மதுரையில் ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி' திட்டத்தில் இதுவரை 500 வீட்டு மனைகள் முழுமையாக விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. இந்த சாதனையை கொண்டாடும் வகையில், இந்த திட்டம் அமைந்துள்ள கப்பலூர் விமான நிலைய ரிங் ரோட்டில், வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்த ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி திருவிழா' நிகழ்ச்சியை ஜி ஸ்கொயர் நடத்தியது. இங்கு இடம் வாங்கியவர்கள் அவர்களது குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் என ஏராளமான பேர் கலந்து கொண்டனர். ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி திருவிழாவில்' சிறந்த அறிஞரும் தொலைக்காட்சிகளில் புகழ்பெற்றவருமான சாலமன் பாப்பையா தலைமையில் சிறப்பு




நகைச்சுவை பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் அவருடன் பட்டிமன்றம் புகழ் ராஜா ஸ்டாண்ட்அப் நகைச்சுவை நடிகர் மதுரை முத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர். மதுரையில் வேகமாக வளர்ந்து வரும் கப்பலூர் பகுதியில் 30 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி 50க்கும் மேற்பட்ட உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் கட்டுமானத் தயார் நிலையில் உள்ள 533 வீட்டு மனைகளை கொண்டுள்ளது. இதன் உட்புறம் தார் சாலைகள், 24X7 சிசிடிவி கண்காணிப்பு, தெருவிளக்குகள் விலையில்லா சாலை மேம்பாட்டுக் கொள்கை மற்றும் 100 சதவீத தெளிவான ஆவணங்கள் ஆகியவை இந்த திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகும். தமிழ்நாட்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய முதலீட்டு இடங்களில் ஒன்றாக கப்பலூர் மாறி வருகிறது. எனவே நாங்கள் இங்கு நடத்திய 'ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி திருவிழா' என்பது அதன் துவக்கம் மட்டுமே என தெரிவித்தார்.



# தமுஎகச கல்லல் கிளைக் கூட்டம்

சிவகங்கை, ஜூலை.15-

சிவகங்கை மாவட்டம் கல்லல் விஜெயம் அரங்கத்தில்தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கல்லல் கிளைக் கூட்டம் நடைபெற்றது. கிளைப் பொருளாளர் சித்ராதேவி வரவேற்புரையாற்றினார். கிளைத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கி இவ்வியக்கத்தின் முக்கியத்துவங்கள் மற்றும் சட்ட திட்டங்களை எடுத்துக் கூறினார். கிளைச் செயலாளர் பிரபு கிளை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது, ஆகஸ்ட் மாதம் கல்லல் கிளை மாநாடு நடத்த முயற்சி மேற்கொள்வது மற்றும் அதற்கான திட்டமிடுதலை எடுத்துக் கூறினார். துணைத் தலைவர் விநாயகமூர்த்தி நன்றியுரை ஆற்றினார். சமீபத்தில் மறைந்த நாட்டுப்புறப்பாடகி கலை மாமணி கொல்லங்குடி கருப்பாயிக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்கள் நாகரத்தினம், சித்திரைச் செல்வி, கவி பாரதி, சரவண பிரவின், இராஜ கணபதி கலந்து கொண்டனர்.

# வேலூர். பெண்மையின் இலக்கணம் ராஜேஸ்வரி விசுவநாதன்

காட்பாடி, ஜூலை.15-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் விஐடி வெற்றி கதை, உலகமே போற்றும் வி.ஐ.டி என்ற கல்வி சாம்ராஜ்யம் உருவாக காரண மானவரும், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் என்று அரசியலில் கோலோச்சிய மதிப்புமிகு ஜி.விசுவநாதன் அவர்களின் இதய ராணியாகவும், ராணி என்றால் படோபமான நகைகள் அணிந்து யார் அங்கே? என் அதிகாரம் செய்யாமல்



இங்கே வாப்பா என ஏழைகளை அழைத்து அன்னமிட்ட அன்பு தாயாகவும், கல்வி தந்தை, வி.ஐ.டி வேந்தர் விசுவநாதன் அவர்களின் வாழ்வில் சுக துக்கங்களில் பக்கபலமாக இருந்து, என்றும் அவருக்கு துணை நின்றவரும், தன்னுடைய அடையாளத்தையே மறைத்து பெண்மையின் இலக்கணமாக திகழ்ந்த வரும், எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்த்து, நல்ல கல்வி கொடுத்து இன்று அவர்களும் உலக அளவில் சிறந்து விளங்க காரணமான மனிதருள் மாணிக்கமாகவும், மண்ணில் வசித்த மங்கையர் திலகமாகவும், விண்ணில் இருந்து அனைவரையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் இதய தெய்வத்திற்கு அவருடைய பிறந்த நாளில் இதயபூர்வமான அஞ்சலியை செலுத்தி வணங்குகின்றோம்.

டாக்டர். ராஜ்பாபு செய்தி உதவி ஆசிரியர் பாரத தூண்கள் செய்திகள், மக்கள் கருத்து நாளிதழ் மாவட்ட செய்தி யாளர் மற்றும் ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவர் தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கம். வேலூர் மாவட்டம்.



# விவசாய கிணற்றில் தவறி விழுந்த புள்ளிமானை வேலூர் தீயணைப்பு படையினர் மீட்டனர்

வேலூர், ஜூலை.15-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, இலவம்பாடி ஊராட்சி, குடிசை சாலை தெரு, கொல்லைமேடு விவசாய நிலங்களில், முயல், பன்றி, மான், மயில் போன்றவை சுற்றித்திரிந்து மேய்வது வழக்கம். குடிசை கிராமம் வனப்பகுதி காட்டிலிருந்து, புள்ளிமான் ஒன்று காட்டின் கால்வாய் வழியாக விவசாய நிலத்திற்கு வந்துள்ளது. இந்தப் புள்ளிமான் விவசாய நிலத்தில் மேய்ந்து கொண்டுள்ள போது திடீரென துள்ளி குதித்து விவசாய கிணற்றில் தவறி விழுந்துள்ளது. உடனடியாக இப்பகுதி விவசாயிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தகவலறிந்த வனத்துறையினர் மற்றும் தீயணைப்புத்துறை படையினர், தீயணைப்பு வாகனத்துடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கிணற்றில் தவறி விழுந்த புள்ளிமானை வேலூர் தீயணைப்பு நிலைய அலுவலர் (பொ) முருகேசன், மூத்த தீயணைப்பு வீரர் பாண்டியன் தலைமையில், தீயணைப்பு பணியாளர்கள் சதீஷ்குமார், விமல்குமார், தினேஷ், சுந்தர் அஜித்குமார் கிணற்றில் இறங்கி தீவிரமாக இரண்டு மணி நேரப்போராட்டத்திற்கு பிறகு ஒரு கீறலன்றி புள்ளிமானை மீட்டனர். வேலூர் வனச்சரக அலுவலர் தரணி, அணைக்கட்டு வனத்துறை வனவர் துரைமுருகன் தலைமையில், வனத்துறை பணியாளர்கள் சோழவரம் பிரிவு பன்னீர்செல்வம், அத்தியூர் பிரிவு காந்தகுமார், வனக் காப்பாளர்கள் செல்வராஜ், தயாளன், வனக் காவலர்கள் சந்தோஷ்குமார் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் தீவிர முயற்சியில் மீட்ட புள்ளிமானை பாதுகாப்பாக கொண்டு சென்று இலவம்பாடி ஊராட்சி, குடிசை கிராம வனப்பகுதி காப்பு காட்டுக்குள் விட்டனர். இது குறித்து இப்பகுதியில் வசிக்கும் கிராம பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், தீயணைப்பு ப்படையினர் மற்றும் வனத்து றையினரின் நற்பணியை பாராட்டி வருகின்றனர்.

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சில பிரிவுகளுக்கான இடங்கள் உள்ளன சேர விருப்பமுள்ளவர்கள் கல்லூரி முதல்வரை அணுகலாம்

நாகப்பட்டினம், ஜூலை.15-

நாகப்பட்டினம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 202526ம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டு சேர்க்கை நடைபெற்று கொண்டு வருகிறது இந்நிலையில் நாகப்பட்டினம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை கணிதம் பி பி ஏ ஆங்கிலம் போன்ற பாடப்பிரிவுகளில் சில இடங்கள் காலியாக உள்ளது சந்தர்ப்பத்தை கல்லூரி பயில விரும்பும் மாணவ மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கல்லூரி முதல்வர் அஜிதா (மு.கூ.பொ) அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார் இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது நாகபட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்த ஆண்டிற்கான முதலாம் ஆண்டு மாணவ மாணவி சேர்க்கை கலந்தாய்வு மூலம் மூன்று கட்டமாக நடைபெற்றது இந்நிலையில் கல்லூரியில் ஒரு சில பாடப்பிரிவுகளில் குறிப்பாக (B A.TAMIL) இளங்கலை




தமிழ் (BA.ENGLISH) இளங்கலை ஆங்கிலம் BSc கணிதம் Bsc ( கணினி அறிவியல்) கம்ப்யூட்டர் சயின்ஸ் (BBA) இளங்கலை வணிக நிர்வாகவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் சில இடங்கள் காலியாக உள்ளது படிக்க விருப் பமுள்ள மாணவ மாணவியர்கள் விண்ணப்பம் செய்யாதிருந்தாலும் என்னை நேரில் அணுகலாம் வறுமையின் காரணமாக கல்லூரி கட்டணம் செலுத்த முடியவில்லை என்றாலும் மேலும் தாய் தந்தையை இழந்த படிக்க ஆர்வம் உடைய மாணவ மாணவியர்களும் என்னுடைய தொடர்பில் வரவும் தேவைக்கு விடுதி வசதியும் ஏற்பாடு செய்யப்படும் இடைநின்ற மாணவர்களும் கல்லூரியில் சேரலாம் அரசின் உதவி தொகை கிடைக்கும் அனைத்து மாணவர்களும் கல்வியால் உயருங்கள் எனது தொடர்பு எண் 9976596006 ஆகும் இந்த எண்ணில் தொடர்பு கொண்டு தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள் என குறிப்பிட்டுள்ளார்..


## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகங்கை.

**I.A NO: 5/2023 O.S NO: 11/2023**

1. ஜெயராஜ்
2. லூயிஸ்
3. ஜான்போஸ்கோ
4. அசோக்குமார்
5. ஜோசப் தனபாலன்.

(வாதிகள் தங்களுக்காகவும் ஆரோக்கியா நகர் பகுதியில் குடியிருக்கும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தானத்தில்)

...எதிர்மனுதார்கள்/வாதிகள்

1. டேவிட்
2. வட்டாட்சியர் அவர்கள் காளையார்கோவில்
3. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சிவகங்கை
4. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சிவகங்கை
5. தமிழக அரசு, அதன் மாவட்ட ஆட்சியர். சிவகங்கை.

...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி மனுதார்கள்/வாதிகள் தரப்பில் இந்த நம்பர் பிரதிவாதிகள் மீது காளையார்கோவில் டவுன். ஆரோக்கியா நகரின் பொதுப்பாதையை வாதிகள் புழங்கிவருவதை இந்த நம்பர் 1ம் பிரதிவாதி ஏதும் தடையீடர் செய்யக்கூடாது என வழக்குச் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதார்கள்/வாதிகள் தங்களுக்காகவும் ஆரோக்கியா நகர் பகுதியில் குடியிருக்கும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தானத்திலும் வழக்கு தாக்கல் செய்வதந்த அனுமதியளித்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்த மனுவும் IA No.5/2023 என நம்பராகி அதில் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியும் வருகின்ற 18.07.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுதார்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சம்பந்தமாக யாருக்கேனும் 'சேபனை இருப்பின் அன்றையதினம் காலை 10 மணி அளவில் மேற்படி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்ரம் மனுதார்கள்/வாதிகளுக்கு சாதகமாக வழக்கு தீர்மாளிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

சொத்து விபரம்:

சிவகங்கை மாவட்டம், காளையர்கோவில் தாலுகா, சோமநாதமங்கலம் குருப், ஆரோக்கியா நகரில் சர்வே எண்கள்.201/4A.201/3D வழியாக செல்லும் நிழமேல் 20 அடி அகலம் கொண்ட தென்வடல் பொதுப்பாதை

நான்குமால்

கிழக்கே: 1ம் பிரதிவாதி டேவிட் அவர்கள் காலியிடம்,

மேற்கே: செபஸ்தி யான் அவர்கள் புஞ்சை

வடக்கே: ஆரோக்கியா நகர் குடியிருப்புகள்

தெற்கே: மதுரைதொண்டி மெயின் ரோடு.

அட்வகேட்

**B.Karthick, B.BE, LL.B.,**

**Advocates Sivagangai**



## திருத்தேர்வளையில் உள்ள கிராம ஊராட்சி சேவை மைய அலுவலகத்தை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க கிராம மக்கள் கோரிக்கை

ஆர் எஸ்.மங்கலம். ஜூலை.15-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே உள்ள திருத்தேர்வளை ஊராட்சி திருத்தேர்வளையில் கடந்த ஆட்சியில் பல இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கிராம ஊராட்சி சேவை மைய அலுவலகம் பல ஆண்டுகள் ஆகியும் பயன்பாட்டுக்கு வரமால் காட்சி பொருளாக இருப்பதாக கிராம மக்கள் குற்றச்சாட்டு.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது ,

கடந்த ஆட்சியில் பல இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கிராம ஊராட்சி சேவை மைய அலுவலகம் இன்றுவரை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வராமல் காட்சி பொருளாக உள்ளது ஏற்க்கனவே திருத்தேர்வளை சுற்று வட்டார பகுதியில் கிராம நிர்வாக அலுவலகம் ,ரேசன் கடை, அங்கன்வாடி மையம் உள்ளிட்டவைகள் இல்லாமல் தினசரி சிரமம் அடைந்து வருகின்ற நிலையில் கட்டி முடிக்கப்பட்ட கிராம ஊராட்சி சேவை மையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அதிகாரிகளிடம் பலமுறை கூறியும் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் அதிகாரிகள் அலட்சியம் செய்து வருவதால் மக்கள் சிரமத்தை போக்கும் வகையில் போர்க்கால அடிப்படையில் கிராம ஊராட்சி சேவை மைய அலுவலகத்தை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்துரையாடல்



கன்னியாகுமரி, ஜூலை.15-

கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, மாண மாணவியர்களை நேரில் சந்தித்து, கலந்துரையாடி, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்ட மாணவ மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்துவதற்காக பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் எதிர்கால குறிக்கோள்கள் குறித்து கேட்டறியப்பட்டது. தொடர்ந்து மெல்ல பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆசியர்களிடம் கேட்டறியப்பட்டது. மாணவர்களிடம் பாடங்களில் ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் ஆசிரியர்களை அணுகி நிவர்த்தி செய்து விட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பள்ளிக்கு ஒழுங்காக வருகை புரியாத மாணவனிடம், ஒழுங்காக பள்ளிக்கு வருகை புரிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. கற்றல் திறனில் பின்தங்கியுள்ள மாணவ மாணவியர்களுக்கு சிறந்த முறையில் அவர்களுக்கு புரியும் வண்ணம்மாக கற்பிக்க வேண்டுமென ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு விலையில்லா பாடநூல்கள், பாடக் குறிப்பேடுகள், பள்ளி சீருடைகள். புத்தகப்பை, நிலவரைப்படம். பேருந்து பயண அட்டை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவதோடு அவர்கள் மேற்படிப்பு பயில்வதற்காக வழிகாட்டுதல் முகாம்கள் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. எனவே நீங்கள் நன்றாக பயின்று, பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பயின்று வாழ்வில் முன்னேற்றம் பெறவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் 4ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்



பம்மல், ஜூலை.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பம்மல் நல்லதம்பி சாலை 7வது குறுக்குத் தெருவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் செ. அமிர்தராஜ் தலைமையில் 7வது வட்ட கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் மு.இன்பசேகர், தாம்பரம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு வரவேற்பில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரா.ராஜசேகர், மு.சதீஷ்குமார், ஆ.கௌதம், வெ.ராகேஷ், ம.இன்பராஜ், சீ.ஆகாஷ், எ.பிரசந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் மௌலிவாக்கம் தங்கம், இளம் பேச்சாளர்கள் மா.பூபதி, பம்மல் வீ.தினேஷ், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன், மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, வட்ட செயலாளர்கள் எச்.முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், ப.ஸ்ரீதர் மற்றும் பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இறுதியில் நகர மாணவரணி துணை அமைப்பாளர் மு.இ.சதீஷ்குமார் நன்றி கூறினார்.



## போடி நகர் அருள்மிகு ஸ்ரீ முச்சந்தி காளியம்மன் திருக்கோவிலின் கும்பாபிஷேக விழா

தேனி, ஜூலை.15-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகர் காவல் நிலையம் பின்புறம் அமைந்துள்ள ஸ்ரீ முச்சந்தி காளியம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் சீரும் சிறப்பாக நடைபெற்றது மற்றும் அம்மனுக்கு விசேஷ பூஜையும் தீபாராதனையும் காட்டப்பட்டது. விழாவினைத் தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவின் தலைமை T.B.S.S.C.S. வடமலை ராஜையபாண்டியன்,ஜமீன்தார் தலைவர் அருள்மிகு பரமசிவன் கோவில் அன்னதான அறக்கட்டளை மற்றும் எஸ். லட்சுமணன் போடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர், ராஜேஸ்வரி சங்கர் போடி நகர மன்ற தலைவர்,பி.சி . பாண்டியன் பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் ஆகியோர்களின் முன்னிலையிலும், கோவிலின் தலைவர் செயலாளர் மற்றும் விழா கமிட்டியாளர்கள் வாலிபர் சங்கம் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.




## வேலூர் கோல்டன் சிட்டி ரோட்டரி சங்க 2025-26-ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா

வேலூர், ஜூலை.15-

வேலூர் மாவட்டம், வேலூர் கிரீன் சர்க்கிள் சாந்தி மஹாலில், வேலூர் கோல்டன் சிட்டி ரோட்டரி சங்க 2025 26 ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடைபெற்றது. புதிய தலைவராக ஜி.கருணாநிதி, செயலாளராக சி.சிவக்குமார், பொருளாளராக டி.கே.மனோகரன் பதவியேற்றனர்.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக ரோட்டரி சங்க மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் வி.சுரேஷ் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து பேசினார். கௌரவ விருந்தினராக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். இதில் முன்னாள் நிர்வாகிகள் என்.பாஸ்கரன், சி எம். தங்கதுரை, ஏ.கே.டிவி டிஜிட்டல் நெட்வொர்க் மற்றும் ஏ.கே.தொலைக்காட்சி நிறுவனரும், தொழிலதிபரும், சமூக ஆர்வலருமான ஏ.கே. சரவணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தனர்.

## மேலூர் நகராட்சியில் நடைபாதை வியாபாரிகள் மற்றும் காய்கறி மார்க்கெட் டெண்டரில் நடைபெற்ற ஊழல் தலித் விடுதலை இயக்கம் சார்பில் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு



மதுரை, ஜூலை.15-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலித் விடுதலை இயக்கம் சார்பில் மனு அளித்த மாநிலத் தலைவர் கருப்பையா அளித்த மனுவில் மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட்டில் கங்கவரி வசூல் செய்யும் உரிமம் குறைந்த தொகைக்கு வரி வசூல் செய்யும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920) விதிகளை மீறி இந்த முறைகேடு நடைபெற்றுள்ளது.

இதை நிறைவேற்றிய நகர்மன்றத் தலைவர் முகமது யாசினை, மாவட்ட ஆட்சியர் தகுதி நீக்கம் செய்யலாம்.மேலும் மேலூர் நகராட்சி எல்லைக்குள் ஏலம் எடுக்க 96 தரை கடைகளைத் தவிர தெருக்களில் தலையில் சுமந்து வியாபாரம் செய்து வரும் ஏழை எளிய வியாபாரிகள் தள்ளுவண்டி ஆட்டோ வேன்களில், வியாபடம் செய்து வரும் வியாபாரிகள் இரவு நேர கடைகள், மீன் கடை, விவசாய பொருட்கள், மொத்த ஏலக்கடைகளில் தினசரி குறைந்தது ஒரு நாளைக்கு சுமார் 50 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை தகுதிக்கு ஏற்ப 1000 கடைகளில் வசூல் செய்து வருகிறார்கள். இதன் மூலம் தினமும் சுமார் ஒரு லட்ச ரூபாய் இரசீது இல்லாமல் வசூல் செய்கின்றனர்.குறிப்பாக அரசு மருத்துவமனை தாலுக்கா அலுவலகம், பேருந்து நிலையம் முதல் கக்கன் சிலை, கணேஷ் திரையாங்கம், சந்தப்பேட்டை, அரசு கலைக் கல்லூரி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 1000 நடைபாதை கடைகளில் இரசீது இல்லாமல் வாடகை வசூல் செய்கின்றனர். இச்சம்பவங்கள் குறித்து முறையாக விசாரணை நடத்தி மேலூர் நகராட்சியில் ஏலம் விடாமல் நடைபாதை வியாபாரிகளிடம் மோசடியாக பணம் வசூலிப்பதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்றார்.






■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் குறித்து மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி செய்தியாளர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்வின்போது தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி உடனிருந்தார்.



■ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161